பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 29 | வெள்ளிக்கிழமை | 14.08.2020 | கதிர் 148

## சூறையாடப்பட்டது மாரியம்மன் சிலை

கொழும்பு, ஓக 14

நோர்வூட் கீழ்பிரிவு தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 125 வருடகால பழைமைவாய்ந்த மாரியம்மன் சிலை திருடப்பட்டுள்ளது.

இன்று அதிகாலைவேளையிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளதாக 2

# விசேட பொலிஸ் அதிகாரங்களை வடக்குக்கு ஒருபோதும் வழங்கோம்

## இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர திட்டவட்டம்



கொழும்பு, ஓக 14

வடக்கு மாகாணத்துக்கு என விசேட பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வழங்கப்போவதில்லை என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். 2

## மாகாண தேர்தல்வரை ரணிலேதான் தலைவர்!

### மத்திய செயற்குழு இன்று கூடியது

கொழும்பு, ஓக 14

மாகாணசபைத் தேர்தல் நிறைவடையும்வரை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப் பதவியில் ரணில் விக்கிரமசிங்க நீடிப்பார் என அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று கூடியது. 2

## அமைதியாக காத்திருப்பேன்



கொழும்பு, ஓக 14

எமக்கான சவாலை முறியடித்த பின்னர் முடிவைப்பெறுவதற்கு சிறிது நேரம் அமைதியாகக் காத்திருக்க 2

## இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த தனியார் காணியில் மனித எச்சம்!

### பெண்கள் அணியும் ஆடைகளும் மீட்பு; யாழ்ப்பாணத்தில் பரபரப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 14

யாழ். பண்ணை மீனாட்சி அம்மன் ஆலய வீதிப் பகுதியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியொன்றில் மனித எச்சங்கள் இன்று இனங் காணப்பட்டுள்ளன.

இந்தக் காணியில் கொட்டகை அமைப்பதற்காக நிலத்தைத் தோண்டியபோது மண்டையோடு மற்றும் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. 2

## தேசியப்பட்டியல் சர்ச்சைக்கு முடிவு காண முன்வாருங்கள்!

### தமிழரசின் பொதுச்செயலர் துரைராஜசிங்கம் அழைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற ஆசனம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்கொண்டு செல்ல அனைவரும் முன்வர வேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் 2

### 'சைக்கிள்' அணிக்குள் வெட்டுக்குத்து

## தேசிய அமைப்பாளர், ஊடகப் பேச்சாளர் பதவிகளிலிருந்து மணிவண்ணன் 'அவுட்'

### கட்சியின் மத்திய குழு தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 14

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளிலிருந்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணனை நீக்குவதற்கு கட்சியின் மத்திய குழு தீர்மானம் எடுத்துள்ளது.

முன்னணியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் 2

## 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

### செப்ரெம்பர் முதல் நடைமுறைக்கு

கொழும்பு, ஓக 14

50 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவைக்குள் இணைத்தல், வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரு கின்றது.

இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சௌபாக்கியத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக வறுமை இல்லாத இலங்கையை உருவாக்குதல் என்ற குறிக்கோளை அடையும் நோக்கத்துடன் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த - ஜி.சீ.ஈ. சாதாரண தரத்திலும் பார்க்க குறைந்த கல்வித் தரத்தைக் கொண்ட - ஒரு லட்சம் பேருக்கு 2



## தடைகளைத் தகர்த்து உணர்வெழுச்சியுடன் செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஓக 14

முல்லைத்தீவு மாவட்டம், வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகம் மீது இலங்கை விமானப் படையின் கிபிர் விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட 54 பாடசாலை மாணவிகள் மற்றும் 07 பணியாளர்கள் ஆகியோரின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு, கிழக்கில் இன்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன.

இன்று நினைவேந்தல் நிகழ்வு செய்வதற்குப் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் தடை விதிக்கப்பட்ட நிலையிலும் - பொலிஸாரின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் - இராணுவத்தினர் மற்றும் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தேசியப்பட்டியல் சர்ச்சைக்கு ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இன்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குச் சரிவு காரணமாக ஒரேயொரு தேசியப்பட்டியல் நியமனமே கிடைக்கப் பெற்றது. வழமையாக இந்தத் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் சந்தித்து ஒரு முடிவை எடுப்பார்கள்.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற ரீதியில் நான் (அவர்கள்) எடுக்கும் முடிவைத் தெரிவிப்பவனாகக் கலந்துரையாடலில் கலந்துகொள்ள வேண்டிய நடைமுறைகளே இருந்து வந்தன.

இம்முறை நான் திருகோணமலை சென்றபோது அவ்வாறான நடைமுறை முழ்ந்திருக்கும் என்ற கருதல் இருந்தது. ஆனால், அது தொடர்பில் தெளிவான விளக்கத்தைப் பெறவில்லை.

வழக்கம்போல் பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடந்து முடிந்திருக்கும் என்ற எண்ணம் என்னிடம் இருந்தது. தேசியப் பட்டியல் தொடர்பில் பேசவேண்டும் வாருங்கள் என்று எனக்கு திருகோணமலையில் இருந்து அழைப்பு வந்தது.

நான் செல்ல முன்பாக தலைவர் மாவைசேனாதிராஜாவிடம் கூறியபோது தான் வரவில்லை என்று சொன்னார். நான் திருகோணமலை சென்று தேசியப் பட்டியலுக்கு யாரை நியமிப்பது தொடர்பான கலந்துரையாடலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனுடன் செய்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட இடங்களில் அம்பாறை மாவட்டத்துக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. அதனை அங்கு வழங்க வேண்டும் என்ற முன்மொழிவை நான் முன்வைத்தேன். ஏற்கனவே நியமனக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் திருகோணமலையில் குகதாசனுக்குத் தேசியப் பட்டியல் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் அதனை அமுல்படுத்துவது அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கும் எனச் சொல்லப்பட்டது - என்றார்.

## 50 ஆயிரம் பட்டதாரி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

பலநோக்கு அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் தொழில்வாய்ப்பைப் பெறவுள்ளளோருக்கு 6 மாத தொழில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்று முடிந்தது.

அவர்களுக்கான பயிற்சிகள் எதிர் வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 50 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவைக்குள் இணைக்கும் திட்டத்தில் அவர்களுக்கான பயிலுநர் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான நியமனம் செப்டெம்பர் முதலாம் திகதி நடைமுறைக்கு வருகின்றது என ஜனாதிபதி செயலகம் இன்று அறிவித்துள்ளது.

## தடைகளைத் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரச புலனாய்வாளர்கள் ஆகியோரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் செஞ்சோலை வளாகத்தில் உயிரிழந்தவர்களை நினைந்துருகி உறவினர்களால் கட்டங்கட்டமாக சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் உள்ளிட்டவர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆண்டு தோறும் நினைவேந்தல் இடம்பெறும் வள்ளிபுனம், இடைக்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவு வளைவுக்கு அருகில் வழமையாக இடம்பெற்று வரும் நிலையில் குறித்த இடத்தில் நினைவேந்தல் நடத்தப் பொலிஸார் தடை விதித்திருந்தனர்.

இருந்தபோதிலும் பொலிஸார் மற்றும் படையினரின் தடைகளையும் மீறி தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் அந்த இடத்துக்குச் சென்றபோது பொலிஸார் குறித்த இடத்தில் நிகழ்வு செய்யவேண்டாம் என்றும், வேறு இடத்தில் அஞ்சலி செலுத்துமாறும் தெரிவித்தனர். இருந்தும் வழமைபோல் நிகழ்வு செய்யும் அதே இடத்தில் சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள். இதனை அவதானித்த அருகில் உள்ள தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களும் வந்து சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தியுள்ளார்கள்.

நினைவேந்தல் இடம்பெற்ற பகுதிகளில் ஆயுதம் தாங்கிய படையினர், பொலிஸார் மற்றும் அரச புலனாய்வாளர்கள் பிரசன்னமாகியிருந்தனர். அஞ்சலி நிகழ்வை மேற்கொள்பவர்களை அவர்கள் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, வடக்கு, கிழக்கின் ஏனைய இடங்களிலும் செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

## மாகாண தேர்தல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது பொதுத்தேர்தலில் படுதோல்வி ஏற்பட்டதற்கான காரணங்கள் ஆராயப்பட்டன. கட்சி உறுப்பினர்கள் பலகோணங்களில் கருத்துகளை முன்வைத்தனர்.

எனினும், கட்சிதலைமைப்பதவியானது இளம் தலைவரொருவருக்கு வழங்கப்படவேண்டும் என்பது பெரும்பாலானவர்களின் கருத்தாக இருந்தது.

இதன்படி கட்சி தலைமைப்பதவிக்கு போட்டியிடும் அனைவருக்கும் வாய்ப்பளிப்பதற்கும், கட்சி தொண்டர்களின் கோரிக்கைக்கமைய புதிய தலைவரை தெரிவுசெய்வதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், உடனடியாக தலைமைப் பதவியில் மாற்றம் வருவதற்கு இடமில்லை. மாகாணசபைத் தேர்தல் முடிவடையும்வரை அல்லது மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படும் வரை தலைமைப்பதவியில் ரணில் நீடிப்பார் என அறியமுடிகின்றது.

புதிய தலைவருக்கு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு அவர் எவ்வாறு தேர்தலை கையாள்கிறார் என்பது கண்காணிக்கப்படும்.

## தேசிய அமைப்பாளர், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மணிவண்ணண் கட்சியின் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டார் என்று கட்சியினர் தெரிவித்து வந்த நிலையில் நேற்று அவசரமாகக் கூடிய கட்சியின் மத்திய குழு மணிவண்ணனை நீக்குவதென முடிவெடுத்துள்ளது.

எனினும், கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து அவர் இன்னமும் நீக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதனால் அவர் வகித்த பதவிகளிலிருந்து மணிவண்ணன நீக்கப்பட்டிருந்தாலும் கட்சியின் உறுப்பினராகவே தொடர்ந்தும் இருக்கின்றார்.

## இராணுவக் கட்டுப் .........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தப் பகுதி 2006ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளது.

மனித எச்சங்களுடன் பெண்கள் அணியும் ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விசேட பொலிஸ் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனது இராஜாங்க அமைச்சுக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாணத்துக்கென விசேட பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் பொலிஸ் துறை பிளவுண்டு போகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, வடக்கு மாகாணத்துக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அமைதியாக ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டியது அவசியமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தனது முகப் புத்தகத்தில் இவ்வாறு பதிவேற்றியுள்ளார்.

நிறைவடைந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பொலன்னறுவையில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன சிறந்த வெற்றியைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட போதிலும் அவர் அமைச்சரவை அமைச்சராக அமர்த்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சூறையாடப்பட்டது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தில் புனரமைப்பு பணிகள் இடம்பெற்றுவருவதால் சாமி சிலைகள், ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அறையொன்றில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அந்த அறை உடைக்கப்பட்டு மாரியம்மன் சிலைகளவாடப்பட்டுள்ளது. காலையில் குருக்கள் பூஜைக்காக வருகைதந்திருந்தபோதே இது பற்றித் தெரியவந்துள்ளது. இதனையடுத்து உடன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ள பொலிஸார், மோப்ப நாய்களின் உதவியுடன் திருட்டுக் கும்பலை தேடிவருகின்றனர்.







காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ராஜபக்ஷக்களின் திட்டம்

"பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்" என்பது பழமொழி. இலங்கைத் தமிழர்கள் தரப்பிலும் நிலைமை இன்று இதுதான்.

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் வீறு கொண்டு, விஸ்வரூபம் எடுத்து உருக்கொண்டிருக்கின்றது. அது தன்னிஷ்டப்படி நாட்டின் அரசமைப்பை மாற்றக் கூடிய தாராள நிலையை எட்டியுள்ளது. தேவைப்பட்டால் நாடாளுமன்றத்தில் நூற்றியைம்பதுக்கும் மேற்பட்ட ஆசனங்களையும் அது 'வாங்கிக் கொள்ள' முடியும்.

இந்தச் சமயத்தில்தான் தமிழர் தரப்பில் பிரிவு வலுத்திருக்கின்றது.

தமிழர் தரப்பிலிருந்து வெளியாகும் சமிக்ஞைகள் ஆரோக்கியமானவையாக இல்லை.

தெற்கில் கிளர்ந்துள்ள பேரினவாத மேலாதிக்கத்தை – மேலாண்மையை – எதிர்கொண்டு நிமிர்வதற்கு 'இணக்க அரசியல்', 'முரண்பாட்டு அரசியல்', 'எதிர்ப்பு அரசியல்', 'மிதவாத அரசியல்' எதுவும் சரிப்பட்டு வரப்போவதில்லை என்பது தெளிவு.

இந்தத் தென்னிலங்கை எழுச்சியை எதிர்கொண்டு சமாளித்து, தமிழர் தம் இருப்பையும், கௌரவ வாழ்வையும், இனத்துவப் பரம்பலையும் தக்கவைத்து, மேலெழுவது எங்ஙனம் என்று ஆழமாய்ச் சிந்திக்க வேண்டிய தருணத்தில், பிளவுண்டு, பிரிவுபட்டு, விலகி நிற்பது குறித்துத் தமிழ்த் தலைமைகள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன என்று வேதனை தரும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அரசமைப்பை மாற்றக் கூடிய முழு வலிமையுடனும் அதிகாரத்துடனும் ஆட்சிப் பீடமேறியிருக்கும் ராஜபக்ஷக்கள், தேர்தல் காலத்தில் தாம் அறிவித்தபடி அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை உடனடியாக மாற்றுவார்கள் என்று இப்போது பரவலாகப் பேச்சடிபடுகின்றது.

உண்மையில் ராஜபக்ஷக்கள் அரசு என்ன செய்யப் போகின்றது?

13 ஆவது திருத்தம் தொடர்பில் ராஜபக்ஷக்களின் கருத்தும் நிலைப்பாடும் யாது?

இந்த விடயத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் பிரதமர் ரஜபக்ஷவுக்கும் இரண்டு முக்கிய சிரத்தைகள் – கவலைகள் – உள்ளன.

ஒன்று – நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு இன்னொரு நாட்டின் அழுத்தத்தோடு இணக்கம் காணப்பட்ட விடயமே தீர்வாக உள்ளது என்ற விவகாரம் நிலைத்திருப்பதை அவர்கள் அடியோடு விரும்பவில்லை. அதாவது 13 ஆவது திருத்தம் என்றும், அது இந்தியப் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட விடயம், இந்தியாவுடன் உடன்பாடு – இணக்கம் – ஏற்படுத்தித்தான் 13 ஆவது திருத்தம் தொடர்பான எந்த மாற்றத்தையும் கையாளலாம் என்று கூறப்படுவதை சிங்கள, பௌத்த தேசியவாதிகளாகத் தங்களை நிலைநிறுத்தியுள்ள ராஜபக்ஷக்கள் அடியோடு விரும்பவில்லை.

அடுத்தது – 13 ஆவது திருத்தத்தில் மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் சரத்துகள் – அவை நடைமுறைப்படுத்தப்படவில்லையாயினும் – அரசமைப்பில் இருக்கவே கூடாது என்பது அவர்கள் கருத்து.

இப்போதைய அரசமைப்பில் இந்த விடயங்களைக் குறிப்பிட்டு நீக்கவோ, மாற்றவோ முயற்சித்தால் அது தொடர்பில் இந்தியாவுடன் பேச வேண்டும், இணக்கம் காண வேண்டும் என்றெல்லாம் ராஜீக அழுத்தம் வரும் என்பது ராஜபக்ஷக்களுக்குத் தெரியும்.

அதனால்தான் இந்தப் பிரச்சினைகளையும் சேர்ந்து முறியடிப்பதற்கு புதிய வியூகம் வகுத்திருக்கின்றார்கள் அவர்கள்.

நாட்டு மக்கள் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு எங்களுக்கு ஆணை தந்திருக்கின்றனர் என்ற பெயரில் புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதே அவர்களின் எண்ணம்.

அப்படிச் செய்தால் 13 ஆவது திருத்தத்தை மாற்றுவது, 19 ஆவது திருத்தத்தை நீக்குவது என்ற கதைகள் எல்லாம் அடிபட்டுப் போய் விடும். 13 மற்றும் 19 ஆம் திருத்தங்களில் தமக்கு விரும்பாத அம்சங்களை எல்லாம் நீக்கியதாகப் புதிய அரசமைப்பு வடிவத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினால், அதில் பிற நாடு ஒன்றின் – இந்தியாவின் – அழுத்தத்தோடு கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகள் என்ற சொல்லாடலே அடிபட்டுப் போய் விடும்.

இதுதான் ராஜபக்ஷக்களின் கணிப்பு. இதற்கான அரசமைப்பு நகல் வடிவம் ஏற்கனவே தயார் என்றும் கூறப்படுகின்றது. முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்துப் பெயருக்குப் பேசி, அங்கிருந்து புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி ஆரம்பமாவது போன்ற ஒரு வெளிப்படுத்தலைக் காட்டத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

தென்னிலங்கை இவ்வளவு வேகமாகவும், உஷாராகவும், உறுதி யோடும் காய்களை நகர்த்த, மறுபுறத்தில் இதனால் பெரிதும் பாதிக்கப்படப் போகின்ற தமிழர் தரப்பின் தலைவர்களோ இந்த ஆபத்துப் பற்றிச் சிந்திக்காமல் தங்களுக்குள் மேலும் மேலும் பிளவுண்டு, பிரிந்து நிற்கக் கங்கணம் கட்டிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கூட்டமைப்புக்குள் ஒரு பிரிவு தனிக்குழுவாக இயங்குவது குறித்துப் புதிய சபாநாயகருக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. அது குறித்து அடுத்து வரும் நாள்களில் இப்பத்தியில் பார்ப்போம்.

## செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு யாழிலும்



யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக அமைந்துள்ள உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க வளாகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று காலை செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் இணைந்து அஞ்சலி செலுத்தினர்.

## மாகாணசபைத் தேர்தலுக்கு அரசு நடவடிக்கை எடுக்கும்!

### மத்திய மாகாண ஆளுநர்

கொழும்பு, ஓக.14

அரசாங்கம் மாகாணசபை தேர்தலை நடத்துதவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமென மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) மத்திய மாகாண ஆளுநர் காரியாலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மாகாண சபை தேர்தலை புதிய முறை மையில் நடத்துவதா அல்லது பழைய முறைமையில் நடத்துவதா என்பது தொடர்பாக நாடாளுமன்றமே தீர்மானிக்குமெனவும் லலித் யூ.கமகே கூறியுள்ளார்.

எனினும் ஆளுநர் என்ற வகையில், தேர்தலை நடத்துவதற்கு முழுமையான ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்

### கலாநிதி ஆறு. திருமுருகன் அழைப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பண்பினால் ஒன்றுபட்டு எந்த மக்கள் வாக்களித்தார்களே அந்த மக்களுக்கு ஒன்றுமையாகச் சேவை செய்வதற்கு அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்.

– இவ்வாறு அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவரும் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் வலியுறுத்தியுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றுகூட்டி ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யவுள்ளதாகவும், இந்த அழைப்புக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக மக்களுக்கு உதவுகின்ற நற்பணிக்காக ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்று மிகவும் அன்பாகப் பொதுமக்கள் சார்பில் வேண்டுகின்றேன்.

குறிப்பாக பழைய பகைமைகளை வளர்த்துக்கொள்வதால் பயணில்லை. இன்று மக்கள் நன்மை கருதி எதிர்கால நல்விருத்தி கருதி ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய தேவை இன்று எமக்கு உணர்த்தப்பட்டுள்ளது. எனவே, பகையை வளர்த்துக்கொள்ளாமல் பண்பினால் ஒன்றுபட்டு எந்த மக்கள் எமக்கு வாக்களித்தார்களே அந்த மக்களுக்கு ஒன்றுமையாகச் சேவை செய்வதற்கு அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

இதற்காக விரைவில் யாழ்ப்பாணம் பொது நிறுவனம் இருக்கின்ற நல்லை ஆதீனம் போன்ற இடங்களில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றுகூட்டி ஒற்றுமையாகச் செயற்படுவதற்குக் கோருவதற்குக் காத்திருக்கின்றோம்.

இந்த இடத்தில் நான் பெரியவன் நீ பெரியவன் என்று பேதமைகொள்ளாமல் மக்களின் நன்மை கருதி ஒன்றுபட்டு நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து அரசுடன் சிறந்த பேச்சுக்களை நடத்திப் பகையை வளர்த்துக் கொள்ளாது ஜதார்த்ததுக்குப் பொருத்தமான செயல்களைச் செய்வது அனைவரினதும் கடமையாகும்.

இலங்கையிலுள்ள தற்போதைய அரசு பெரும் வெற்றியைச் சந்தித்துள்ளது. எனவே, இலங்கையில் பெரு வெற்றியைச் சந்தித்த இந்த அரசுடன் நல்ல முறையில் சந்தோஷத்துடன் மக்களின் குறைகளை எடுத்துக் கூறியும் எங்களின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டி எல்லோரும் ஒருமித்த குரலில் வேண்டி மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டியதுதான் சாலப்பொருத்தம்.

கட்சிமுரண்பாடுகள், கருத்து முரண்பாடுகள் என எல்லாவற்றையும் ஒரு கரையில் தூக்கி வைத்து விட்டு நடைமுறைக்குப் பொருத்தமான மக்களை நல்வழிப்படுத்துவதற்கான முயற்சியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுக்க வேண்டும். எதிர்வாதங்களினால் எந்தவித நன்மைகளையும் அடைய முடியாது.

எனவே, ஆட்சியில் இருக்கின்ற அரசுடன் நட்பு ரீதியாக சில விடயங்களைப் பேசித் தீர்க்க வேண்டும்.

அதேவேளை, எங்கள் மக்களுக்கு இருக்கின்ற உண்மையான குறைபாடுகளை எடுத்துரைத்து நல்ல எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயம். இன்று வடக்கில் என்றால் என்ன மலையகத்திலோ அல்லது தென்னிலங்கையிலோ வாழுகின்ற தமிழர்கள் சமாதானத்தையே வேண்டுகின்றார்கள். சமாதானமான சூழலை அனைவரும் சேர்ந்து தோற்றுவிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

எனவே, அந்த நல்ல சூழலை உருவாக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். எனவே, சான்றோர் பெருமக்கள், ஆத்மீகத் தலைவர்கள் இத்தகைய அழைப்பை ஏற்படுத்துகின்றபோது அநேகர் பாரபட்சம் இன்றி ஒன்றுகூட்டி நல்ல முடிவை எடுப்பதற்கு ஆயத்தமாகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் – என்றார்.

# மகாராஷ்டிரா சிறைச்சாலையில் 1000 கைதிகளுக்கு கொரோனா!

மகாராஷ்டிரா சிறைச்சாலையில் உள்ள 1000 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக மாநில சிறைத்துறை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் தீவிரமடைந்து வரும் நிலையில், மாநிலங்களின் வரிசையில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது.

இதன்படி சிறையில் உள்ள 1000 கைதிகளுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையுடன், 292 அதிகாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாநில அரசு தெரிவித்துள்ளது. இவர்களில் 6 கைதிகள் உயிரிழந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவில் நேற்று ஒரேநாளில் 64 ஆயிரத்து 142 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 24 இலட்சத்து 59 ஆயிரத்து 613 ஆக அதிகரித்துள்ளதுடன், உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 48 ஆயிரத்து 144 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் மொத்தமாக குணமடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை 17 இலட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்துள்ளதுடன், 6 இலட்சத்து 60 ஆயிரம் பேர் தொடர்ந்தும் சிகிச்சையில் உள்ளனர் எனவும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# இந்தியாவின் சுதந்திரதினம் பற்றி தமிழக முதலமைச்சரின் அறிவிப்பு!



இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு மாவட்டம் தோறும் உள்ள சுதந்திர போராட்டத் தியாகிகளின் வீடுகளுக்கு சென்று அவர்களை கௌரவிக்க தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை புனித ஜோர்ஜ் கோட்டை கொத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் முதல்வர் பழனிசாமி நாளை காலை 8.45 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார்.


கல்பனா சாவ்லா விருது, அப்துல் கலாம் விருது, முதல்வரின் நல் ஆளுமை விருது, மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக சேவையாற்றிய தனிநபர், நிறுவனம், மருத்துவர், சிறப்பாக செயற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான விருதுகளையும் இதன்போது முதல்வர் வழங்கவுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் 'ஆண்டுதோறும் சுதந்திர தின நிகழ்ச்சியில் சுதந்திர போராட்ட தியாகிகள், பொதுமக்கள், மாணவர்கள், பள்ளிக் குழந்தைகள் பங்கேற்பார்கள். இந்த ஆண்டு கொரோனா தொற்றால் நிலவும் அசாதாரண சூழலைக் கருத்திற் கொண்டு பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் யாரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டாம்' என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. .

அத்துடன் மாவட்டம்தோறும் 10 சுதந்திர போராட்ட தியாகிகளின் வீடுகளுக்கே சென்று பொது சுகாதார வழிமுறைகளை பின்பற்றி பொன்னாடை போர்த்தி உரிய மரியாதை செலுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்கியுள்ள விடுதிக்கு நேரில் சென்று, சமூக இடைவெளியைப் பின்பற்றி மாணவர்களுக்கு இனிப்பு வழங்க சமூக நலத்துறை அமைச்சர் சரோஜாவுக்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

# சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் உரை இன்று!



இந்தியாவின் 74 ஆவது சுதந்திர தினம் நாளை (சனிக்கிழமை) கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இன்று மாலை உரையாற்றவுள் ளார்.

ஜனாதிபதி உரை அரசுத் தொலைக்காட்சிகளில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒலிபரப்பப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நாடு அடைந்துள்ள வளர்ச்சி, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், பொலிஸார் போன்ற பலருக்கு தமது வாழ்த்துகளைக் கூறி கௌரவப்படுத்த வதுடன் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி தமது சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவிக்க உள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# கொரோனா தடுப்பூசி தொடர்பான அறிவிப்பை வெளியிடவேண்டும்!

## ராகுல்காந்தி கோரிக்கை



இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், இந்தியா கண்டுப்பிடிக்கும் கொரோனா தடுப்பூசியை விநியோகம் செய்வதற்கான கொள்கையை மத்திய அரசு விரைவில் வெளியிட வேண்டும் என காங்கிரஸ் கட்சின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ராகுல் காந்தி இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், 'கோவிட் 19க்கான தடுப்பூசியைக் கண்டுபிடித்த நாடாக இந்தியா விரைவில் மாறும். அதை அனைத்துத் தரப்பினருக்கும் கிடைக்கும் வகையில் விநியோகம் செய்வ தற்கான கொள்கைகளை இந்திய அரசாங்கம் தற்போதே உருவாக்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

கொவைட் 19 க்கான பல தடுப்பூசிகளின் சோதனைகள் இந்தியா உட்பட உலகம் முழுவதும் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக முதல்வரின் சுதந்திரதின வாழ்த்து

இந்தியாவின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினம் குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், -

இந்தியாவின் 74 ஆவது சுதந்திர திருநாள் நாளை கொண்டாடப்படுகிறது. தமிழகம் முதன்மை மாநிலமாகத் தொடர்ந்தும் திகழச் செய்திட மக்கள் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்.

மக்களின் ஒத்துழைப்போடு கொரோனா பாதிப்பில் இருந்து தமிழகம் முழுமையாக மீண்டு, மீண்டும் வெற்றி நடைபோடும்' எனத் தெரிவித்துள்ளார்.

# கோழிக்கோடு விபத்தில் சிக்கிய அனைவரும் பூரண குணமடைவு



கேரள மாநிலம் கோழிக்கோடு விமான விபத்தில் காயமடைந்த அனைவரும் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என ஏயார் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

டுபாயில் இருந்து இந்தியா வருகை தந்த ஏயார் இந்தியா விமானம் கடந்த வெள்ளிக்கிழமை தரையிறங்கும்போது விபத்தில் சிக்கியது.

அந்த விபத்தில் 18 பேர் உயிரிழந்த நிலையில், பலர் காயமடைந்து பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் 85 பேர் குணமடைந்து வீடு திரும்பிய நிலையில் எஞ்சியிருந்த 7 பேர் இன்று (வெள்ளிக்கிழமை) குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விமான விபத்திற்கு விமானிகளின் தவறான முடிவும் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்பட்ட நிலையில், தற்போது இது குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்காக 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் தலைவராக கேப்டன் எஸ்.எஸ் சாஹர் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை குறித்த விபத்து தொடர்பிலான காரணத்தை ஆராய்ந்து அடுத்த 5 மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோழிக்கோடு விமான நிலையத்தில் பெரிய ரக விமானங்கள் தரையிறங்கவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் கடந்த 24 மணிநேரத்தில் 390 பேர் கொரோனாவால் பாதிப்பு!

கனடாவில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பெருந் தொற்றினால், கடந்த 24 மணித்தியாலத்தில் 390பேர் பாதிக்கப்பட்டமையோடு, 15பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 24 ஆவது நாடாக விளங்கும் கனடாவில், இதுவரை ஒரு இலட்சத்து 21ஆயிரத்து 234பேர் மொத்தமாக பாதிக் கப்பட்டுள்ளனர். மேலும், மொத்தமாக 9ஆயிரத்து 15 பேர் உயிரிழந்துள்ளனர். நான்காயிரத்து 666பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற மையோடு, ஒரு லட்சத்து ஏழாயிரத்து 553பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதுதவிர, இரண்டு ஆயிரத்து 291பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பெலாரஸில் மக்கள் மீது பொலிஸ் தாக்கு!



சர்ச்சைக்குரிய தேர்தலுக்கு பிறகான போராட்டங்களில், பெலாரஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் மீது பொலிஸா ரின் மிருகத்தனமான தாக்குதல்களுக் கான ஆதாரங்கள் அதிகரித்து வருகின்றன என மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை முதல் தடுத்து வைக் கப்பட்டுள்ள 6 ஆயிரத்து 700 பேரில் சிலர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அடிப்பது உட்பட தவறான நடத்தை ளுக்கு இலக்காகினர் என குற்றஞ்சாட்டி யுள்ளனர். இது பரவலான சித்திரவதை என்று அம்னஸ்டி இன்டர்நேனல் கூறியுள் ளது

வாக்கு மோசடி தொடர்பான பரவலான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் பெலாரஸில் தொடர்ச்சியாக ஐந்து நாள்களாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விடுவிக்கப்பட்ட சில கைதிகள், காயம டைந்த மற்றும் வீங்கிய உடல்களைக் காட்டிய புகைப்படங்களை சமூகவலை தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட மக்கள் நிர்வா ணமாக்கப்பட்டு அடித்து, பாலியல் பலாத் காரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர் என அம்னஸ்டி இன்டர்நேனல் தெரிவித்துள் ளது.

## ஐக்கிய அரபு அமீரகம்:
# இஸ்ரேலுக்கிடையே அமைதி ஒப்பந்தம்!



பல ஆண்டுகளாக நீடித்து வந்த ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே யான இராஜாங்க ரீதியிலான மோதல் முடிவுக்கு வந் துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்பின் முயற் சியால் இரு நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதன்மூலம் ஜோர்தான், எகிப்து ஆகிய நாடுக ளுக்கு அடுத்தபடியாக இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தம் மேற்கொண்ட நாடு என்ற பட்டியலில் அமீரகம் இணைந்துள்ளது. வளைகுடா நாடுகளில் இஸ்ரேலு டன் அமைதி ஒப்பந்தம் மேற்கொண்ட முதல் நாடு என்ற பெருமையையும் அமீரகம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இஸ் ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அபுதாபி பட் டத்து இளவரசர் முகமது அல் நஹ்யான் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், வரலாற்று சிறப்பு மிக்க இந்த நிகழ்வு மத்திய கிழக்கில் அமைதியை முன்னேற்றும்' எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளும் தங்கள் உறவில் சுமூக நிலையை உருவாக்க ஒப்புக்கொண் டுள்ளன. இந்த அமைதி ஒப்பந்தத்தின் மூலம் இஸ் ரேல் - அமீரகம் இடையே தூதரக உறவு வலுவ டைய உள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, இன்னும் சில நாள்களில் இருநாடுகளுக்கும் இடையே அமைதி உடன்படிக்கை கையெழுத்தாக உள்ளது. அதில் தொலைத்தொடர்பு, முதலீடு, சுற்றுலா, நேரடி விமான சேவை, பாதுகாப்பு, தொழில்நுட்பம், மின் சக்தி, சுகாதாரத்துறை, பொரு ளாதாரம் உட்பட பல்வேறு துறைகளில் இரு நாடு களும் இணைந்து செயற்பட ஒப்புதல் அளிக்கப்படு கிறது.

இரு நாடுகளுக்கும் இடையே நேரடித் தொடர்பு அதிகரித்து தூதரங்கள் திறக்கப்பட்டு உறவு வலுப் படுத்தவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, மேற்கு கரை பகுதிகளில் 'அனக்சேன்' எனப்படும் நிலகையகப் படுத்தல் அல்லது நாட்டின் உரிமையை விரிவுபடுத் தல் நடவடிக்கைகளை இஸ்ரேல் நிறுத்தவேண் டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேலுடன் அமீரகம் மேற் கொண்டுள்ள அமைதி ஒப்பந்தத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ள பாலஸ்தீனம், இது 'துரோகச்செயல்' எனக் குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும், அமீரகம் தனது முடிவைத் திரும்பப்பெற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

அதேபோல் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள காசா பகுதியில் இருந்து செயற்படும் ஹமாஸ் போரா ளிகள் அமைப்பும் அமீரகத்தின் இந்த நடவடிக்கையை 'தங்கள் மக்களின் முதுகில் குத்தும் செயல்' எனத் தெரிவித்துள்ளது.

1945ஆம் ஆண்டுக்குப் பிறகு தனிநாடாகத் தன்னை அறிவித்துக் கொண்ட இஸ்ரேல் மீது போர் தொடுத்த அரபு நாடுகளில், எகிப்து 1979ஆம் ஆண் டும், ஜோர்தான் 1994ஆம் ஆண்டு இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.



# தனிமைப்படுத்தல் விதிகளை பின்பற்றவேண்டிய நாடுகளில் பிரான்ஸ், நெதர்லாந் சேர்க்கப்பட்டன!

பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்தில் இருந்து பிரித்தானியா வுக்கு வரும் மக்கள், தனிமைப்படுத்தல் விதிகளை பின்பற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை (சனிக்கிழமை) முதல் பிரான்ஸ் மற் றும் நெதர்லாந்தில் இருந்து வரும் மக்கள், 14 நாள்கள் தனிமைப்படுத்தல் விதியை பின்பற்ற வேண்டிய கட்டா யத்தில் உள்ளனர்.

இதுதொடர்பாக போக்குவரத்து செயலாளர் கிராண்ட் ஜூப்ஸ் கூறுகையில், 'இந்த நடவடிக்கை மொனாக்கோ, மால்டா, டர்க்ஸ் மற்றும் கைகோஸ் மற்றும் அருபாவிலி ருந்து பயணிக்கும் மக்களுக்கும் பொருந்தும். கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் குறைக்க இது அவசியம்' எனக் கூறினார்.

பிரித்தானியாவின் இந்த முடிவு பரஸ்பர நடவடிக்கைக ளுக்கு வழிவகுக்கும் என்று பிரான்ஸ் எச்சரித்துள்ளது.

ஐரோப்பிய விவகாரங்களுக்கான பிரான்ஸின் வெளி யுறவுத்துறை செயலாளர் கிளெமென்ட் பியூன், 'பிரித்தா னியாவின் முடிவு பிரான்ஸ்காரர்களுக்கு மிக வருத் தத்தை அளிப்பதாக' டுவீட் செய்துள்ளார்.

பிரித்தானியா அரசாங்கத்தின் முடிவு சமீபத்திய நாள் களில் பாதிக்கப்பட்ட நாடுகளில் தொற்றுகள் அதிகரித்ததைத் தொடர்ந்து வருகின்றது.

# துணை ஜனாதிபதிப் பதவிக்கு கமலா ஹாரிஸ் தகுதியற்றவரா?

## ட்ரம்ப் மறைமுகத் தகவல்



அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியின் துணை ஜனாதிபதி வேட் பாளரான கமலா ஹாரிஸ், துணை ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கு தகுதியற்றவர் என்றுதான் கேள்வி பட்டுள்ளதாக விமர்சகர் ஒருவரின் கருத்தை மேற்கோள் காட்டி அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாள ரான ஜோ பைடன் செனட்டர் கமலா ஹாரிஸை துணை ஜனா திபதி வேட்பாளராக அறிவித்துள் ளார்.

இந்த நிலையில் கமலா ஹாரி சுக்கு பல்வேறு தரப்பிலும் இருந்து ஆதரவும் எதிர்ப்பும் பெருகி வரு கின்றன.

இதனிடையே நேற்று (வியாழக் கிழமை) இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவித்த ட்ரம்ப் - 'கமலா ஹாரிஸ் அமெரிக்க துணை ஜனாதிபதியாவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவில் லை என்று மிகவும் திறமை வாய்ந்த வழக்கறிஞர் ஒருவர் கட்டுரையொன்று எழுதியுள்ளார் என நான் இன்று அறிந்தேன். அது சரியான கருத்தா என்று எனக் குத் தெரியாது.

ஆனால், அவரை துணை குடியரசுத்தலைவருக்கான வேட்பா ளராக அறிவிப்பதற்கு முன்னர் இதுகுறித்து ஜனநாயகக் கட்சியி னர் பரிசோதித்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். எனினும், அவர் இந்த நாட்டில் பிறக்க வில்லை என்பதால் அவருக்கு போட்டியிடத் தகுதியில்லை என்று கூறப்படுவதால் இதுவொரு தீவிர மான விவகாரம்' எனக் கூறினார்.

கமலா ஹாரிஸ் பிறக்கும்போது அவரது பெற்றோர்கள் அமெரிக் காவில் மாணவர்களுக்கான விசா வில் இருந்திருப்பார்களானால், அவரது பிறப்பு அமெரிக்காவின் அதிகார எல்லைக்குட்பட்டதாக இல்லாமல் இருக்கலாம் என்று பேராசிரியர் ஈஸ்ட்மேன் வாதிடுகி றார்.

துணை ஜனாதிபதி பதவிக்கு அறிவிக்கப்பட்டுள்ள முதல் கருப் பின பெண் மற்றும் முதல் ஆசிய அமெரிக்க பெண் கமலா ஹாரிஸ் ஆவார்.

# கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் மெக்ஸிகோவில் 5 லட்சத்துக்கு மேல்!



மெக்ஸிகோவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந்தொற் றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை ஐந்து இலட்சத்தைக் கடந் தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, மெக்ஸிகோ வில் ஐந்து இலட்சத்து ஐந்தாயிரத்து 751பேர் கொரோனாவால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

மேலும், இதுவரை மொத்தமாக 55ஆயிரத்து 293பேர் வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட் டும் 7,371பேர் வைரஸ் தொற்றி னால் பாதிக்கப்பட்டுள்ளனர். 627பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது வரை ஒரு இலட்சத்து 8ஆயிரத்து 951பேர் மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் மூவாயிரத்து 675பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

அத்துடன் இதுவரை மூன்று இலட் சத்து 41ஆயிரத்து 507பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ள னர்.

# வெளிநாட்டிலுள்ள இலங்கையரை நாட்டுக்கு அழைத்துவர ஏற்பாடு!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் வேலைத்திட்டங்கள் விரிவுபடுத்தப்படவுள்ளன.

வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளர் அட்மிரால் ஜயனாத் கொலம்பபே இதனைத் தெரிவித்துள்ளார்.

94 நாடுகளில் இருந்து 20 ஆயிரத்து 850 இலங்கையர்கள் இதுவரையில் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரங்களில் மத்திய கிழக்கு மற்றும் மாலைதீவில் உள்ள இலங்கையர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளில் வாழும் பெருமளவான இலங்கையர்கள் தங்களை நாட்டுக்கு அழைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அவர்களை அழைத்து வருவதற்கும் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு அழைக்குமாறு கோரி இதுவரையில் 50 ஆயிரம் இலங்கையர்கள் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு தொழிலாளர்கள் வரி செலுத்துதல் கட்டாயம்!

இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கட்டாயம் வரி செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி அறிவிப்புக்கு அமைய, மேலதிக தனிநபர் வருமான வரி இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நிறுவனத்தின் உரிமையாளர்கள் ஊழியர்களின் ஊதியத்தில் இருந்து மேலதிக தனிநபர் வருமான வரியை அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குடியுரிமை சட்டத்தின் அடிப்படையில் இலங்கை பிரஜைகள் என்பது இலங்கை குடியுரிமை மற்றும் இரட்டைக் குடியுரிமையை வைத்துள்ள எந்தவொரு நபரும் உள்ளடக்கப்படுவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இலங்கை குடியுரிமை அற்ற ஊழியர்களுக்கு அவர்களின் அனுமதி இன்றி ஊதியத்தில் இருந்து தனிநபர் வருமான வரி அறவிடுவது கட்டாயமென உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# அபிவிருத்திப் பணிகள் தடைகளின்றித் தொடரும்!

## என்கிறார் ஜீவன் தொண்டமான்



அபிவிருத்திப் பணிகளைத் தடை இன்றி தயக்கம் இன்றி முன்னெடுப்பேன். யாரும் அச்சப்படத் தேவையில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியவில் அமைந்துள்ள தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இன்று (வெள்ளிக்கிழமை) காலை சுப நேரத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றபின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

'தற்போதைய புதிய அரசாங்கத்தில் வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்புகளைக் கண்காணிப்பதற்காக அமைச்சரவை அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சு நாட்டின்பிரதமரின்நேரடிப்பார்வையில்காணப்படுகின்றது.

ஆகையால் யார் குற்றம் சொன்னாலும் அச்சப்படத் தேவையில்லை. எனது அமைச்சின் கடமைகளை எவ்வாறு முன்னெடுக்கின்றேன் என்பதை பொருத்திருந்து பாருங்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் அதன் அணுகுமுறைகளை வெவ்வேறாக முன்னெடுத்துச் செல்கின்றது.

அந்தவகையில் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபாய் சம்பளம் விடயம் தொழிற்சங்க ரீதியாக முன்னெடுக்கப்படவுள்ளது. அதேநேரத்தில் இது தொடர்பாக நாட்டின் பிரதமருடைய கவனத்திற்கும் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபாய் தொடர்பான பேச் சற்று வித்தியாசமாக எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும். பெருந்தோட்டப் பகுதிகளில் அமைக்கப்படும் வீடமைப்பு ஆரம்ப காலத்தில் சொன்னதை போல் எழுத்தளவில் மாடி வீடாக இருந்தாலும், (சிலப்) முறையிலான வீடுகளே அமைக்கப்படும்.

ஆனால் இந்திய வீடமைப்பை வைத்துக் கொண்டு நாம் அரசியல் செய்யப்போவதில்லை. வீடமைப்பு தொடர்பில் முன்னெடுக்கும் பணிகளை நீங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியுடன் மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் தேசிய பல்கலைகழகம் அமையப்பெறவுள்ளது. இன்று கல்வி அமைச்சராக ஜீ.எல்.பீரிஸ் பதவியேற்றுள்ளார்.

அவரிடம் கலந்தாலோசித்துள்ளோம். ஆகையால் இன்னும் ஓரிரு வாரங்களில் பல்கலைகழகம் அமைப்பது தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என நம்பிக்கை உள்ளது.

வடக்கு, கிழக்கு மலையகம் உள்ளிட்ட மாணவர்களை உள்ளடக்கியே இவ் தேசிய பல்கலைகழகம் அமைக்கப்படும். அங்குள்ள இளைஞர்களையும் நாம் கவனிக்க கடமைப்பட்டுள்ளோம்.' ஏனக் குறிப்பிட்டார்.

# இரத்துச்செய்யப்பட மாட்டாது 19 ஆவது திருத்தச் சட்டம்!

## என்கிறார் வாசுதேவ நாணயக்கார

19ஆவது திருத்தச்சட்டம் இரத்துச் செய்யப்படாது. அதில் சில மாற்றங்கள் மாத்திரமே செய்யப்படுமென நீர் வழங்கல் மற்றும் வடிகால் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

'தற்போதைய சூழ்நிலையில் அரசியல் அமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டம் இரத்துச் செய்யப்படாது.

எனினும் அதில் சில மாற்றங்களை செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம். புதிய குடியரசு அரசியல் அமைப்பைக் கொண்டிருப்பது நம்பிக்கை என்று நான் நினைக்கிறேன். இந்த விடயம் தொடர்பாக நாம் யாரும் இதுவரை பேசவில்லை. உடன்படிக்கைக்கு வரவும் இல்லை.

'அத்துடன் இந்த வாக்களிப்பு முறைமையை நீக்கி, தொகுதி விகிதாசார முறைமையை ஏற்படுத்துவோம்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பதினைந்து வயது சிறுமியை கர்ப்பிணியாக்கிய இளைஞர்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாமிமலை பெயாலோன் தோட்ட பெரிய சூரியகந்த பிரிவில் 15 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு இரண்டு மாதக் கர்ப்பிணியாகி உள்ளார் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சிறுமிக்குத் தாய் இருந்த போதும் தாய் கைவிட்டுச் சென்றமையால் அச்சிறுமி பாட்டியிடம் வளர்ந்து வருகிறார். கடந்த 3 மாதங்களாக அந்த சிறுமியுடன் அதே தோட்டத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவர் தொடர்பு வைத்திருந்தார். பாழடைந்த வீடு ஒன்றில் வைத்து 3 தடவைகள் அந்தச் சிறுமியை அவர் துஷ்பிரயோகம் செய்தார் என்று கூறப்பட்டது. தற்போது சிறுமி 2 மாதக் கர்ப்பணியாக உள்ளார் என கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவு வைத்திய அதிகாரி தெரிவித்தார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டார். மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் அச்சிறுமியின் பாட்டி செய்த முறைப்பாட்டிற்கு அமைய மஸ்கெலியா பொலிஸார் சிறுமியிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த இளைஞர் தனது இல்லத்திற்கு மேல் உள்ள பாழடைந்த வீட்டில் வைத்து சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்தார் என்பது தெரியவந்துள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையுடன் அச்சிறுமியைத் தாம் திருமணம் செய்து கொள்வார் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் அச்சிறுமிக்கு 18 வயதுக்குக் குறைவாக இருப்பதால் சந்தேக நபரை இன்று ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் தாங்கள் ஆஜர் செய்ய உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தார்.

# வவுனியாவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வயல்காணிகளை உடன் விடுவிக்குக!

## நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் வலியுறுத்து

வவுனியாவில் வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லையிடப்பட்ட வயல் காணிகளை உடனடியாக விடுவித்து அடுத்த காலபோக செய்கையை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி பஸில் ராஜபக்ஷவுக்குத் தெரிவித்துள்ளார் என வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவருமான கு. திலீபன் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி பசில் ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நானும் பங்குபற்றியிருந்தேன். இதன் போது நான் வன்னி பிரதேசத்தில் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன்.

இதன் பிரகாரம் பல வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டு அவற்றில் விவசாயம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமை தொடர்பிலும் அதனை உடனடியாக விடுவித்து விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு ஆவன மேற்கொள்ளுமாறும் தெரியப்படுத்தியிருந்தேன்.

இதற்கு உடனடி அனுமதி வழங்கப்பட்டதுடன் உடன் அமுலுக்கு வரும் வகையில் மேற்படி வயல் காணிகளில் போடப்பட்டுள்ள எல்லைக்கற்களை அகற்றி எதிர்வரும் காலபோக செய்கையில் விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு ஆவன மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா, மன்னார், முல்லைத்தீவில் மக்கள் எதிர்கொள்ளும் காணிகளுக்கான அனுமதிப் பத்திர விடயமும் சுட்டிக்காட்டப்பட்டதன் அடிப்படையில் உடனடியாக அதற்கும் தீர்வு காணுமாறு தெரிவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் காலத்தில் குறித்த மாவட்டங்களில் காணி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் சீர் செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனத் தெரிவித்தார்.

# 2020 பொதுத்தேர்தல் பற்றிய ஒருபார்வை

# வெற்றி பெற்றது 41, கோட்டைவிட்டது 71

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன்
சமூகவியல் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

இம்முறைத் தேர்தலில் விருப்பு வாக்கின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை பாகம்2, பாகம்3 இல் பார்த்திருந்தோம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் 41 சிறுபான்மையான தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கது. அவ்வாறு சிறுபான்மையினர் சார்பாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் யார்? என்பதையும், கடந்தமுறைத் தேர்தலில் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் இம்முறை 71 உறுப்பினர்கள் தோல்வியடைந்திருக்கின்றனர். அவ்வாறு தெரிவுசெய்யப்படாதவர்கள் யார்? என்பதையும் இப்பத்தியில் பார்க்கலாம்.

பாகம் - 06



இம்முறைத் தேர்தலில் 11 தேர்தல் மாவட்டங்களில் இருந்து தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். மாத்தளை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், பொலன்னறுவை, மொனராகலை, இரத்தினபுரி, கம்பஹா, களுத்துறை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் இருந்து சிறுபான்மையினர் எவரும் தேர்தலில் வெற்றிபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களிலே சிறுபான்மையினர் சார்பாக பிரதிநிதிகள் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியிருக்கின்றனர். 25 தமிழர்களும், 16 முஸ்லிம்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கஜன் இராமநாதன் (36,365), இலங்கை தமிழரசு கட்சி சார்பில் சிவஞானம் சிறிதரன் (35,884), எம்.ஏ. சுமந்திரன் (27,834) மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் (23,840) ஆகியோரும்இ ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் டக்ளஸ் தேவனந்தா (32,146), அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் கஜேந்திர குமார் பொன்னம்பலம் (31,658), தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் சி.வி விக்னேஸ்வரன் (21,554) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் தமிழர்களாவர்.

வன்னி தேர்தல் மாவட்டத்திலிருந்து ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரிஷாத் பதியுதீன் (28,203 வாக்குகள்), இலங்கை தமிழரசு கட்சி சார்பாக சாள்ஸ் நிர்மலநாதன் (25,668 வாக்குகள்), செல்வம் அடைகலநாதன் (18,563 வாக்குகள்) மற்றும் விநோநோகராதலிங்கம் (15,190 வாக்குகள்) ஆகியோரும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் காதர் மஸ்தான் (13,454 வாக்குகள்), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் குலசிங்கம் திலீபன் (3,203 வாக்குகள்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் 4 தமிழர்களும், 2 முஸ்லிம் பிரதிநிதிகளும் அடங்குகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக எஸ்.எம் தௌபீக் (43,759), இம்ரான் மஹ்ரூப் (39,029) ஆகிய இரு முஸ்லீம் பிரதிநிதிகளும், இலங்கை தமிழரசு கட்சியில் ஆர்.சம்பந்தன் (21,422) தமிழ் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சார்பாக சிவனேசதுறை சந்திரகாந்தன் (பிள்ளையான்) (54,198), இலங்கை தமிழரசு கட்சி சார்பில் சாணக்கியன் இராஜபுத்திரன் (33,332) மற்றும் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) (26,382) ஆகியோரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் சதாசிவம் வியாழேந்திரன் (அமல்) (22,218), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அஹமட் செய்னுலாப்தீன் நசீர் (17,599) போன்றோர் இம் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் ஒரு முஸ்லிம் மற்றும் 4 தமிழர் பிரதிநிதிகளாவர்.

அம்பாறை அதாவது திஹாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் எம்.எச்.எம் ஹரீஸ் (36,850), பைசல் காசிம் (29,423) ஆகியோரும், தேசிய காங்கிரஸில் ஏ.எச்.எம் அதாவுல்ல (35,697), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் மொஹமட் முஸரப் (18,389) இம் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். இம் மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரவூப் ஹக்கீம் (83,398), அப்துல் ஹலீம் (71,063) ஆகிய இரு முஸ்லிம் பிரதிநிதிகளும், எம். வேலுகுமார் (57,445) என்ற தமிழ் பிரதிநிதியும் தெரிவாகினர். நுவரொலியா தேர்தல் மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதிகள் ஐவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். மறைந்த முன்னாள் அமைச்சரான ஆறுமுகம் தொண்டமானின் புதல்வன் ஜீவன் தொண்டமான் (109,155), மருதபாண்டி ரமேஸ்வரன் (57,902) ஆகிய இருவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பழனி திகாம்பரம் (83,392), வேலுசாமி இராதாகிருஸ்ணன் (72,167), மயில்வாகனம் உதயகுமார் (68,119) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பதுளை தேர்தல் மாவட்டத்திலிருந்து இரு தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் வடிவேல் சுரேஸ் (49,762), அரவிந்தகுமார் (45,491) ஆகிய இருவருமே தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.



அதேபோன்று அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இசாக் ரஹ்மான் (49,290), கோகலை தேர்தல் மாவட்டத்திலிருந்து ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக கபீர் ஹாசீம் (58,716), புத்தளம் மாவட்டத்திலிருந்து முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு சார்பாக அப்துல் அலி சப்ரி (33,509) போன்றோர் தெரிவு செய்யப்பட்டனர். கொழும்பு மாவட்டத்திலிருந்து எஸ்.எம் மரிக்கார் (96,916), முஜிபுர் ரஹ்மான் (87,589) ஆகிய இரு முஸ்லிம் பிரதிநிதிகளும், தமிழ் பிரதிநிதியாக மனோ கணேன் (62,091) அவர்களும் தெரிவாகினர். இவ்வாறு இம்முறைத்தேர்தலில் மொத்தமாக 41 தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் சிறுபான்மையினர் சார்பாகத் தெரிவாகி இருக்கின்றனர்.

2015 தேர்தலில் விருப்பு வாக்குகளின் மூலம் தங்களது ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்ட 71 உறுப்பினர்கள் இம்முறை வெற்றி பெற முடியாமல் தோற்றிருக்கின்றனர். நாடாளுமன்றத் தேர்தல் 2020 இல் மாவட்ட ரீதியாக ஆசனத்தை இழந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பது பற்றிப் பார்க்கும் போது, கொழும்பு மாவட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க, ஹிருணிகா பிரேமச்சந்திர, சுஜீவ சேனசிங்க, ஏ.எச்.எம்.பௌசி, திலங்க சுமதிபாலா ஆகிய 6 உறுப்பினர்கள் இம்முறைத் தேர்தலில் ஆசனங்களை இழந்திருக்கின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் அர்ஜுன ரணதுங்க, ருவன் விஜேவர்தன, எட்வர்ட் குணசேகர, அஜித் மன்னப்பெரும, விஜித் விஜயமுனி சொய்சா, சதுர சேனரத்ன, துலிப் விஜசேகர ஆகிய 7 உறுப்பினர்களும் இம்முறைத் தேர்தலில் வெற்றியீட்டவில்லை. களுத்துறை மாவட்டத்தில் லக;மன் விஜேமன்னே, பாலித தேவரப்பெரும, அஜித் பி.பெரேரா, நலிந்த ஜெயதிஸ்ஸா ஆகிய 4 உறுப்பினர்கள் தங்களது மாவட்டத்தில் ஆசனங்களைக் கைப்பற்ற முடியாமல் போய்விட்டது.

கண்டி தேர்தல் மாவட்டத்திலிருந்து ஆனந்த அலுத்கமகே, லக்கி ஜெயவர்தன ஆகிய இருவரும், மாத்தளை மாவட்டத்தில் லக்ஷ்மன் வசந்தா பெரேரா, ரஞ்சித் அலுவிஹார, வசந்தா அலுவிஹார ஆகிய மூவரும் நுவரெலியாவில் நவின் திஸாநாயக்க, கே.கே.பியதாச ஆகிய இருவரும் நாடாளுமன்றத்திற்கு இம்முறை தெரிவு செய்யப்படவில்லை.

காலி மாவட்டத்தில் வஜிர அபேவர்தன, பியசேன கமகே, பண்டுலா லால் பண்டாரிகொட, விஜேபாலா ஹெட்டியாராச்சி ஆகிய நான்கு உறுப்பினர்களும் இம்முறைத்தேர்தலில் தங்களது ஆசனங்களை கைப்பற்றிக்கொள்ளவில்லை. மாத்தறை மாவட்டத்தில் சுனில் ஹதுந்நெத்தி, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, நிரோஷன் பிரேமரத்ன, மனோஜ் சிறிசேன, மங்கள சமரவீர ஆகிய ஐந்து உறுப்பிள்ர்கள் இம்முறைத் தேர்தலில் வெற்றி பெறவில்லை. ஹம்பாந்தோட்டையில் நிஹால் கலப்பதி என்பவர் தெரிவாகவில்லை.

புத்தளம் மாவட்டத்திலிருந்து பாலித ரங்கே பண்டார, சிசிர குமார அபேசேகர இருவரும் அனுராதபுரம் வீரகுமரா திஸாநாயக்க, எஸ்.சி முதுகுமாரன, சந்தி ராணி பண்டாரா, ஹரிசன், சந்திமா கமகே ஆகிய ஐவர் இம்முறைத் தேர்லில் தங்களது உறுப்புரிமையைப் பெறவில்லை. பொலன்ன றுவையில் நாலக கொலோன்ன, சிட்னி ஜெய ரத்ன ஆகிய இருவரும் பதுளை மாவட்டத்திலிருந்து ரவீந்திர சமரவீர, லக்ஷ்மன் செனவி ரத்ன ஆகியோர் தங்களது ஆசனங்களை இழந்தனர்.

மொனராகலையில் பத்ம உதயசாந்த, சுமேதா ஜி.ஜெயசேனா, ஆனந்த குமாரசிறி ஆகிய மூன்று உறுப்பினர்களும் இரத்தினபுரி துனே கங்கந்த, கருணாரத்ன பரணவிதாரன, ஏ.ஏஇ.விஜயதுங்க ஆகிய மூவரும் கேகாலை மாவட்டத்தில் இருந்து சந்தித சமரசிங்க, சம்பிக்க பிரேமதாச, துசித விஜேமானனே ஆகியோரும் தங்களது ஆசனங்களை இம்முறைத் தேர்தலில் இழந்தனர்.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் அனோமா கமகே, சிறியாணி விஜேவிக்ரம ஆகிய இருவரும் திருகோணமலையில் சுசந்த புஞ்சிநிலமே என்பவரும், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திலிருந்து விஜயகலா மகேஸ்வரன, மாவை சேனாதிராஜா, ஈ.சர வணபவன் ஆகிய மூன்று உறுப்பினர்களும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் இருந்து எஸ்.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் குருநாகல் மாவட்டத்தில் அகிலவிராஜ் காரியவசம், சி.பி.ஏகநாயக்க, தாரநாத் பஸ்நாயக்க, இந்திக பண்டா ரநாயக்க என்பவர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அலி சாஹிர் மௌலானா, அமீர் அலி சிஹாப்தீன், வி.யோகேஸ்வரன், ஞானமுத்து சிறிநேசன் ஆகிய மூவரும் இம்முறைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆசனங்களைக் கைப்பற்றத் தவறிவிட்டார்கள். இவ்வாறு கடந்தமுறைத் தேர்தலில் வெற்றி பெற்று இம்முறை தோல்வியுற்றவர்களின் எண்ணிக்கை 71 ஆகும். இந்த 71 உறுப்பினர்களும் எவ்வாறான காரணத்தால் தங்களது வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை என்பது பற்றி மற்றுமோர் பாகத்;தில் பார்க்கலாம்.

2020 பொதுத் தேர்தல் பற்றிய ஒருபார்வை தொடரும்...

# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்








**படையினர், பொலிஸாரின் தடைகளையும் மீறி செஞ்சோலைப் படுகொலையின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டம், வள்ளிபுனம், இடைக்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவு வளைவுக்கு அருகில் இன்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.**

## சுற்றுலாப் பயணிகளை கண்காணிக்க மென்பொருள்

நாட்டின் விமான நிலையங்கள் திறக்கப்பட்ட பின்னர் உள்வரும் சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிப்பதற்கு கணினி மென்பொருள் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது. சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகள் வீசா பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் முதல் பார்வையிடும் இடங்கள் வரை இந்த மென்பொருள் மூலம் அவதானிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரும் சந்தர்ப்பத்தில் மற்றும் அதன் பின்னர் 5 அல்லது 7 நாள்களுக்குப் பின்னரும் இரண்டு தடவைகள் சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், குறித்த பிசிஆர் பரிசோதனைகளுக்காக சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து கட்டணம் அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் உற்சவ காலத்தில் பக்தர்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றுக!

### நல்லூர் உற்சவம் – சுகாதார நடைமுறைகள்


நல்லூர் பெருந்திருவிழா நடவடிக்கைகளை சுகாதார வழிமுறைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பக்தர்களுடன் முன்னெடுக்குமாறு சுகாதார பணிப்பாளர் நாயகம் – மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர் ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

தொற்று நோய் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி பக்தர்கள் ஆலய சூழலில் கூடும் சந்தர்ப்பத்தில் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே எதிர்வரும் தினங்களில் இறுக்கமான சுகாதார கட்டுப்பாடுகள், விதிமுறைகள் என்பவற்றை மீறி சமூகவிலகலை பொருட்படுத்தாமல் செயற்படுபவர்களுக்கெதிராக தனிமைப்படுத்தலும் நோய்த்தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய துரதிஷ்டநிலை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதுடன் அனைவரையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## இலங்கையுடனான உறவை வலுப்படுத்த விரும்புகிறோம்

### பாக்.வெளியுறவு அமைச்சர்



இலங்கையுடனான உறவை மேலும் வலுப்படுத்த பாகிஸ்தான் விரும்புவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளியுறவு அமைச்சராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டமைக்கு குரே, தனது ருவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார். குறித்த ருவிட்டர் பக்கத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த நெருக்கமாக பணியாற்ற விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்ட தினேஷ் குணவர்தனவை வாழ்த்துவதாகவும் அவர் தனது ருவிட்டர் பதிவில் டுவிட் செய்துள்ளார்.

## மன்னாரில் கைதான ரஷ்யப் பிரஜையை சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை

**(தலைமன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ)**

தலைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக தலைமன்னார் பொலிஸ் நிலையப் பகுதியில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த ரஷ்யப் பிரஜைக்குக் கொரோனாத் தொற்று நோய் இல்லையென தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரை தனது சொந்த நாட்டுக்கு அனுப்பும் படி மன்னார் நீதிவான் மாணிக்க வாசகர் கணேசராஜா உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த திங்கள் கிழமை தலைமன்னார் பகுதிக்குச் சுற்றுல்லா நோக்குடன் வந்த ரஷ்யப் பிரஜை ஒருவர் தலைமன்னார் பகுதியில் வைத்துத் தலைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் ஜனவரி மாதம் இலங்கைக்குச் சுற்றுலாப் பிரயாணியாக வந்திருந்தபோழுது கொரோனா காரணமாக போக்குவரத்து தடைப்பட்டதால் இவர் தனது நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் இவரின் விசா காலாவதியானதைத் தொடர்ந்தே இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.



இவரை அன்றைய தினமே தலைமன்னார் பொலிஸார் மன்னார் நீதிவான் நீதிமன்றில் பதில் நீதவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இவரைத் தனிமைப்படுத்தி பி.சீ.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இக்கட்டளையை மேற்கொண்ட பொலிஸார் இவரை புதன் கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி பி.சீ.ஆர். அறிக்கையையும் சமர்பித்தனர்.

அறிக்கையில் கொரோனாத் தொற்று இல்லையெனத் தெரிவிக் கப் பட்டதைத் தொடர்ந்து அவரை சொந்த நாடான ரஷ்யாவுக்கு மிரிஹானதடுப்பு மையம் ஊடாக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டது.

ரஷ்யப் பிரஜை சார்பாக சட்டத்தரணிகள் எஸ்.டினேஸ், சர்மிளன் டயஸ் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2020 இல் வெளியிடப்பெற்றது.